DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, RANIPET
VELLORE DISTRICT
Case.No.OS.9/2016

| Deposition of Witness for PW1 | |
|---|---|
| Name | சண்முகம் |
| Father Name | லட்சுமணன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the day of 17.08.2022

மு.வி.

நான் இந்த வழக்கில் வாதி. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தை என் தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். என் தரப்பு ஆவணங்களாக

1)12.11.1968 தானசெட்டில் நகல் **வா.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2)1ம் வாதி மற்றும் முனுசாமி பெயரில் உள்ள பட்டா **வா.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3) 20.08.2015 வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4) ரிட்டன் ரிஜிஸ்டர் கவர்(எண்ணிக்கை 2)**வா.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5) அஞ்சலக ஒப்புதலட்டை (எண்ணிக்கை 8) **வா.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6)21.12.2015 வில்லங்க சான்றிதழ் **வா.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. Genaleogy Tree filed by the Plaintiff **வா.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

13 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கும், 13 ம் பிரதிவாதிக்கும் நேரடியாக தொடர்பு கிடையாது என்றால் சரிதான். இந்த பிரதிவாதியை தரப்பினராக சேர்க்கவேண்டும் என்றால் பிரிவு 80 உரிமையியல் நடைமுறை சட்டப்படி முறையாக அறிவிப்பு அனுப்பியிருக்கவேண்டும் என்றும் அவ்வாறு முறையாக நான் இந்த பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பாமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு இந்த பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடி செய்யத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த 13 ம் பிரதிவாதியானவர் இந்த வழக்கிற்கு தேவையில்லாத தரப்பினர் என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிக்கு எதிராக எந்தவித பரிகாரமும் கோராத நிலையில் இந்த பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.